بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ     نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ     وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 33

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

முஹர்ரம் 19 - ஹிஜ்ரி கமரி 1444 ★ ஸஹுஃர் 18 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 18 ஆகஸ்ட் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا تَنۡقِمُ مِنَّاۤ اِلَّاۤ اَنۡ اٰمَنَّا بِاٰیٰتِ
رَبِّنَا لَمَّا جَآءَتۡنَا ؕ رَبَّنَاۤ اَفۡرِغۡ
عَلَیۡنَا صَبۡرًا وَّتَوَفَّنَا مُسۡلِمِیۡنَ ۞

பொருள் :
எங்கள் இறைவனின் அடையாளங்கள் எங்களிடம் வந்தபோது, நாங்கள் அவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளோம். எதற்காக எங்களைப் பழி வாங்குகிறாய். எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையினை இறக்குவாயாக. மேலும், (உனக்கே) கட்டுப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்ற நிலையிலேயே எங்களுக்கு நீ மரணத்தை தந்தருள்வாயாக (என்று நாங்கள் இறைவனை வேண்டுகிறோம்).
( அல் அஃராப் : 127 )

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## திருக்குர்ஆன் ஞானங்கள் வெளிப்படுவதற்கு தக்வா நிபந்தனையாகும் உலக மற்றும் சம்பிரதாயமான கல்வியைப் பெறுவதற்கு தக்வா நிபந்தனை இல்லை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

உண்மையில், ஆன்மாவின் திருப்தி மற்றும் நிறைவிற்கான ஏற்பாடும், ஆன்மாவின் உண்மையான தேவை முழுமையாகின்ற விஷயமும் திருக்குர்ஆனிலேயே உள்ளது. எனவே தான் அல்லாஹ் هُدًى لِّلۡمُتَّقِیۡنَ என்று கூறியுள்ளான். மற்றோர் இடத்தில் لَّا یَمَسُّہٗۤ اِلَّا الۡمُطَہَّرُوۡنَ என்று கூறியுள்ளான். مُطَهَّرُوْن என்பதன் பொருளே இறையச்சமுடையவர்கள் என்பதாகும் هُدًى لِّلۡمُتَّقِیۡنَ என்பதில் அந்தக் கருத்துதான் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து திருக்குர்ஆன் ஞானங்கள் வெளிப்படுவதற்கு தக்வா நிபந்தனையாகும் என்பது தெரிய வருகின்றது. பௌதீக கல்விகளுக்கும் திருக்குர்ஆன் ஞானங்களுக்கும் இடையில் ஒரு மகத்தான வேறுபாடு உள்ளது.

உலக மற்றும் சம்பிரதாயமான அறிவுகளைப் பெறுவதற்கு தக்வா நிபந்தனை இல்லை. ஒருவர் தொழுகை மற்றும் நோன்பை பேணுபவராக இருக்க வேண்டும், அவர் இறைவனின் ஏவல், விலக்கல் கட்டளைகளை எந்நேரமும் பேணுபவராக இருக்க வேண்டும். மேலும் தமது ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் தம்மை அல்லாஹ்வின் கட்டளையின் கீழ் வைப்பவராக இருக்க வேண்டும் என்பதெல்லாம் இலக்கணம், பௌதீகம், தத்துவம், மருத்துவம் போன்றவற்றை படிப்பதற்கு கண்டிப்பான விஷயங்கள் இல்லை. இன்னும் கூறப்போனால் பொதுவாக சிலநேரங்களில் என்ன விஷயம் பார்க்கப்பட்டுள்ளது என்றால், உலக அறிவுகளில் வல்லுநர்களாகவும், மாணவர்களாகவும் இருக்கும் சிலர் நாத்தீகத்தின் அடிமைகளாக இருந்து, எல்லா வகையான தீமைகளிலும் மூழ்கி இருக்கின்றனர். இன்று உலகத்திற்கு முன்னால் ஒரு வலிமையான அனுபவம் இருக்கின்றது. ஐரோப்பாவும், அமெரிக்காவும் பௌதீக அறிவுகளில் பெரும், பெரும் முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது. மேலும் ஒவ்வொரு நாளும் புது கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து வருகின்றனர். இருந்தபோதிலும், அவர்களின் ஆன்மீக மற்றும் ஒழுக்க நிலை மிகவும் வெட்கத்திற்குரியதாக உள்ளது. லண்டனின்

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

**அத்ல் என்ற சொல்லின் பொருள் சமமானது என்பதாகும். அதாவது, தம்மிடம் நடந்து கொள்வதைப் போன்றே மற்றவரிடம் மனிதன் நடந்து கொள்வதாகும். அல்லாஹ்வுடன் நீதம் செய்தல் என்பதன் பொருள் அவனுக்குரிய உரிமைகளை அல்லாஹ் அல்லாதவற்றிற்கு வழங்கக் கூடாது.**

**மேலும், இணை வைத்தலில் ஈடுபடக் கூடாது என்பதாகும். இஹ்ஸான் என்பதன் பொருள் பிறர் தம்முடன் எப்படி நடந்து கொள்கிறார் என்று பார்க்கக் கூடாது. மாறாக ஒருவர் தவறாக நடந்து கொண்டாலும், நாம் அவருடன் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதாகும். ஈதாயிதில் குர்பா என்பதன் பொருள், ஓர் உறவினர் மற்ற உறவினருடன் நடந்து கொள்வதைப் போன்று மனித இனத்துடன் நடந்து கொள்வதாகும்.**

اِنَّ اللّٰہَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ
وَاِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی وَیَنۡہٰی عَنِ الۡفَحۡشَآءِ
وَالۡمُنۡکَرِ وَالۡبَغۡیِ یَعِظُکُمۡ لَعَلَّکُمۡ تَذَکَّرُوۡنَ

(அந்நஹ்ல் : 91)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள் :

பாருங்கள்! இது எவ்வளவு சிறிய வசனமாகும். ஆனால், இதில் முழுமையின் (நேர்மறை, எதிர்மறை என்ற) இரண்டு அம்சங்களும் எவ்வளவு சிறப்பாகவும், அழகிய முறையிலும் ஒன்று கூட்டப்பட்டுள்ளன! அத்ல், இஹ்ஸான், ஈதாயிதில் குர்பா என்ற மூன்று விஷயங்களை மேற்கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும், வெட்கக்கேடு, வெறுக்கத்தக்கது, மற்றும் கிளர்ச்சி என்ற மூன்று விஷயங்களிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. அத்ல் என்பதன் பொருள் சமமான (எதிர்வினை) ஆகும். அதாவது, தம்மிடம் மற்றவர்கள் நடந்து கொண்டதைப் போன்று மனிதன், பிறரிடம் நடந்து கொள்வது ஆகும். தம் மீது அநீதியிழைக்கப்பட்டால், எவ்வளவு அநீதியிழைக்கப்பட்டதோ அதே அளவில் அவர் பழிவாங்கிக் கொள்ளலாம். ஆனால், அதை விட அதிக கடினம் காட்டக் கூடாது. ஒருவர் அவருடன் நல்ல முறையில் நடந்தால், பின்னர் குறைந்தபட்சம் அதே அளவில் அவருடன் நல்ல முறையில் நடப்பது அவர் மீதும் கடமையாகும்.

அல்லாஹ்வுடன் நீதமாக நடத்தல் என்பதன் பொருள் என்னவென்றால், எவ்வாறு அல்லாஹ்

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

## நபிமொழி

**விற்பவரும், வாங்குபவரும் உண்மை பேசினால் அவர்களின் வியாபாரத்தில் பரக்கத் ஏற்படும்:**

(2079) : ஹஸ்ரத் ஹகீம் இப்னு ஹிஸாம் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விற்பவரும், வாங்குபவரும் பிரியாமல் இருக்கும் வரை (வியாபாரத்தை முறித்துக் கொள்ள) உரிமை பெற்றுள்ளனர். அவர்கள் இருவரும் உண்மையுடன் நடந்து இருந்தால், தெளிவான கூற்றுகளை பேசியிருந்தால் அவர்கள் இருவரின் வியாபாரத்திலும் பரக்கத் வழங்கப்படும். அவர்கள் இருவரும் (உண்மையை) மறைத்து பொய் பேசியிருந்தால் அவர்களின் வியாபாரத்தின் பரக்கத் அகற்றப்படும்.

**ஒருவர் அழைப்பின்றி விருந்தாளிகளுடன் வந்துவிட்டால்-வழிகாட்டல்:**

**(2081) :** ஹஸ்ரத் அபூ மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அபூ ஷுஐப் என்ற சுட்டுப் பெயர் கொண்ட அன்சாரி, விலங்குகளை அறுத்துத் துண்டுபோடும் தம் ஊழியரிடம், ஐந்து நபர்களுக்கு தேவையான உணவை எனக்காக தயார் செய்! ஏனென்றால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்தளிக்க விரும்புகிறேன். நான் அன்னாரின் முகத்தில் பசியை உணர்ந்தேன் என்று கூறினார்.

எனவே அவர் (அந்த ஐவரையும்) விருந்திற்கு அழைத்தார். அப்போது அவர்களுடன் மற்றொரு நபரும் வந்துவிட்டார். (அப்போது) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவர் எங்களுடன் வந்துவிட்டார். நீங்கள் இவரை விரும்பினால், அவருக்கு அனுமதி வழங்குங்கள். அவர் திரும்பி செல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அவர் திரும்பி சென்றுவிடுவார். அதற்கு, நான் அவருக்கு அனுமதி வழங்கிவிட்டேன் என்று அவர் கூறினார்.

(புகாரி-தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

**திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் அருளுக்குரிய நடைமுறை மற்றும் அருளுக்குரிய நபிமொழிகளின் ஒளியில் முன்னரே கூறப்பட்டுவிட்டது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள், ஒருபோதும் வெறும் நபித்துவ வாதம் புரிந்ததனால் மட்டும் எவர்மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் [ரலி] அவர்களின் போர் நடவடிக்கைகளும் வெறும் பொய் நபித்துவ வாதிகளை வேரறுக்க வேண்டும் என்பதற்காக இருக்கவில்லை. மாறாக, அந்த முர்தத்களுடைய அசல் சிந்தனையாகக் கிளர்ச்சி செய்யும் நடைமுறை இருந்தது.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 ஜூலை 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **15ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக முஸ்லிம்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு நடைபெற்று வருகிறது. இது சம்பந்தமாக ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் கிந்தா மற்றும் ஹஸ்ர மௌத் பகுதிகளில் முர்தத்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி மேற்கொண்டு இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஸன்ஆவில் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் உறுதியாக நிலைபெற்று விட்ட பிறகு, கடிதம் மூலமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தமது அனைத்து நடவடிக்கைகள் பற்றியும், தெரியப்படுத்தி விட்டு பதிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அதேவேளையில், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து இருந்து வரும் ஏமனின் இதர அதிகாரிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பினார்கள். அதில் மதீனாவுக்குத் திரும்பி வருவதற்கான அனுமதி கோரினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கும் அவர்களுடன் ஏனைய அதிகாரிகளுக்கும் அவர்கள் விரும்பினால் ஏமனிலேயே தங்கியிருப்பதற்கும், விரும்பினால் மதீனாவுக்குத் திரும்பி வருவதற்கும் அதிகாரத்தை வழங்கினார்கள். ஆனால், தமது இடத்தில் யாரையாவது நியமித்துவிட்டு வரவேண்டும் என்றும் கூறினார்கள். தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைத்த பிறகு, அனைவரும் மதீனாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு, இக்ரிமாவுடன் சென்று இணைந்து கொள்ளுங்கள். பிறகு, இருவரும் இணைந்து ஹஸ்ர மௌத் சென்றடையுங்கள். மேலும், ஸியாத் பின் லபீதுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

அவரை அவரது பொறுப்பிலேயே நிலைத்திருக்கச் செய்தவாறு, எவர்கள் எல்லாம் உங்களுடன் இணைந்து மக்காவுக்கும் ஏமனுக்கும் இடையில் ஜிஹாத் செய்து வந்தார்களோ அவர்களுக்குத் திரும்பி வருவதற்கு அனுமதி வழங்கிவிடுங்கள். திரும்பி வர விரும்பினால் திரும்பி வரட்டும். ஆனால், தாமாகவே ஜிஹாதில் கலந்து கொள்வதற்கு முன்னுரிமை அளித்தால், அதாவது நாங்கள் ஜிஹாதில் கலந்து கொள்ள விரும்புகிறோம் என்று மக்கள் தாமாகவே கூறினால் தவிர (மற்றவர்களுக்குத் திரும்பி வர அனுமதி கொடுங்கள்) என்று கூறினார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் மொழியாக்க நூல், ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையும்-சாதனைகளும், பக்கம் 305, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட்)

இக்ரிமாவுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்தது. அதில் அவர்களுக்கு இவ்வாறு கட்டளை வழங்கப்பட்டிருந்தது:

ஸன்ஆவிலிருந்து வந்து கொண்டிருக்கும் முஹாஜிர் பின் அபீ உமைய்யாவுடன் சென்று இணைந்து கொள்ளுங்கள். பிறகு, இருவரும் இணைந்து கிந்தா கோத்திரத்தை நோக்கிச் செல்லுங்கள். இந்தக் கடிதம் கிடைத்ததும் இக்ரிமா மஹ்ராவிலிருந்து புறப்பட்டார்கள். அபீனுக்கு வந்து தங்கி, முஹாஜிர் பின் உமைய்யாவுக்காக காத்துக் கொண்டிருக்க ஆரம்பித்தார்கள். அபீன் என்பதும் ஏமனின் ஒரு நகரத்தின் பெயராகும். (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் மொழியாக்க நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும், பக்கம் 305, அல் ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட்)

கிந்தா கோத்திரத்தின் முர்தத்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி தபரீ வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

முர்தத் ஆவதற்கு முன்னர் கிந்தா மற்றும் ஹஸ்ர மௌத் பகுதிகள் முழுவதும் இஸ்லாத்தை தழுவியபோது, அவர்களிடம் ஸகாத் வசூலிப்பது தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்:

ஹஸ்ரமௌத்திலிருந்து சில மக்களுடைய ஸகாத் கிந்தாவில் செலுத்தப்பட வேண்டும். கிந்தா வாசிகளில் சிலரின் ஸகாத் தொகை ஹஸ்ர மௌத்தில் செலுத்தப்பட வேண்டும். அதாவது, அவற்றை அங்கே அனுப்பி வைக்க வேண்டும். ஹஸ்ரமௌத் வாசிகளில் சிலருடைய ஸகாத் ஸூகூனில் செலுத்தப்பட வேண்டும். ஸூகூன் வாசிகளில் சிலருடைய ஸகாத் ஹஸ்ரமௌத்தில் செலுத்தப்பட வேண்டும்.

இதைக் கேட்ட கிந்தா வாசிகளில் சிலர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களிடம் ஒட்டகங்கள் இல்லை. தாங்கள் பொருத்தமானதாகக் கருதினால், இவர்கள் சவாரிகளில் எங்களிடம் ஸகாத் செல்வங்களைக் கொண்டு வந்து சேர்க்கட்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரமௌத் வாசிகளிடம், உங்களால் அப்படிச் செய்ய முடியும் என்றால் அதன்படி அமல் செய்யுங்கள் என்று கூறினார்கள். இதற்கு, அவர்கள் நாங்கள் பார்ப்போம். அவர்களிடம் பயண விலங்குகள் இல்லை என்றால் நாங்கள் அப்படியே செய்வோம் என்றார்கள்.

பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்த பிறகு ஸகாத் வசூலிப்பதற்கான நேரம் வந்ததும் ஸியாத் அவர்கள் மக்களைத் தம்மிடம் அழைத்தார்கள். அவர்கள் அன்னாரிடம் வந்தார்கள். பனூ வலிய்யா, அதாவது கிந்தா வாசிகள் கூறினார்கள்: நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஸகாத் செல்வங்களை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள்.

அதற்கு அவர்கள், உங்களிடம் பொதி சுமக்கும் விலங்குகள் உள்ளன. உங்களது விலங்குகளைக் கொண்டு வாருங்கள். ஸகாத் செல்வங்களை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் தாமே ஸகாத் செல்வங்களைக் கொண்டு சேர்க்க மறுத்துவிட்டார்கள். கிந்தா வாசிகள் தமது கோரிக்கையில் பிடிவாதமாக இருந்தார்கள்.

பிறகு, அந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களின் நடைமுறை சஞ்சலத்திற்குள்ளானது. ஓர் அடி முன்னோக்கிச் செல்வார்கள். அடுத்த அடி பின்னுக்கு வந்து விடுவார்கள். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் முஹாஜிர் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தவாறு அந்த மக்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் வந்து விட வேண்டும் என்பதற்காக, ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள்.

அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) ஆகிய இருவருக்கும் இவ்வாறு கடிதம் அனுப்பினார்கள்:

நீங்கள் இருவரும் ஹஸ்ரமௌத்துக்குப் புறப்பட்டு விடுங்கள். ஸியாதை அவரது பொறுப்பிலேயே நிலைத்திருக்க வையுங்கள். மக்காவிலிருந்து ஏமன் வரையிலான இடைப்பட்ட பகுதிகளில், எந்த மக்கள் உங்களுடன் இருக்கிறார்களோ அவர்களில் தாமாகவே விரும்பி ஜிஹாதில் கலந்து கொள்ள விரும்புபவர்களை தவிர, மற்றவர்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதி அளித்து விடுங்கள். உபைதா பின் ஸஃதை ஸியாதுக்கு உதவுவதற்காக அனுப்புங்கள்.

ஆகவே, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் இந்தக் கட்டளையின்படி செயல்பட்டார்கள். ஸன்ஆவிலிருந்து ஹஸ்ரமௌத்துக்குப் புறப்பட்டார்கள். இக்ரிமா (ரலி) அவர்கள் அபீனிலிருந்து ஹஸ்ரமௌத்திற்குப் புறப்பட்டார்கள். முஆரிப் எனும் இடத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் ஸுஹைத் எனும் பாலைவனத்தைக் கடந்து ஹஸ்ரமௌத் சென்றடைந்தார்கள்.

கிந்தா வாசிகள் ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களிடம் கோபித்துக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்ட போது, ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் பனூ அம்ர் கோத்திரத்திடமிருந்து ஸகாத் வசூலிப்பதைத் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டார்கள். கிந்தா கோத்திரத்தின் ஓர் இளைஞன் தவறுதலாகத் தனது சகோதரனின் பெண் ஒட்டகத்தை ஸகாத்துக்காக ஹஸ்ரத் ஸியாதிடம் ஒப்படைத்துவிட்டான். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அந்த பெண் ஒட்டகத்தின் மீது நெருப்பால் சூடுபோட்டு அதில் ஸகாத்துக்கான அடையாளமிட்டுவிட்டார்கள்.

அதாவது, இது பைத்துல் மாலுக்குரியது. ஸகாத்துக்கான செல்வம் என்று முத்திரை பதித்துவிட்டார்கள். அந்த இளைஞன், தவறு நடந்துவிட்டது. ஒட்டகத்தை மாற்ற வேண்டும் என்று கூறியபோது, ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அவன் சாக்குபோக்கு கூறுகின்றான் எனக் கருதினார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. அதனால், ஒட்டகத்தை கொடுத்தவர் தமது கோத்திரத்து மக்களையும், அபூ ஸுமைதையும் உதவிக்காக அழைத்தார். அபூ ஸுமைத், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களிடம் ஒட்டகத்தை மாற்றித்தருமாறு கோரிக்கை வைத்தபோது ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் தமது கருத்தில் நிலைத்திருந்தார்கள்.

அபூஸுமைதுக்குக் கோபம் வந்தது. அவன் வலுக்கட்டாயமாக ஒட்டகத்தை அவிழ்த்துவிட்டான். அதனால், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களின் தோழர்கள் அபூ ஸுமைதையும் அவனுடன் இருந்தவர்களையும் சிறைபிடித்துவிட்டார்கள். ஒட்டகத்தையும் (தங்கள்) கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டார்கள். அந்த மக்கள் ஒருவர் மற்றவரை உதவிக்கு அழைத்தார்கள். எனவே, பனூ முஆவியா என்பவர்கள் கிந்தா கோத்திரத்தின் கிளைக் கோத்திரங்களான பனூஹாரிஸ் பின் முஆவியா மற்றும் பனூ அம்ர் பின் முஆவியா ஆகிய கோத்திரங்களின் மக்கள் ஆவார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களிடம் தங்களது தோழர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அந்த மக்கள் கலைந்து செல்லும் வரை கைதிகளை விடுதலை செய்ய மறுத்துவிட்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) கூறினார்கள்:

அவ்வாறு இல்லை. நீங்கள் சென்றுவிடுங்கள். பிறகு, நான் பார்ப்பேன். அன்னார் (ரலி) அவர்கள் அந்த மக்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களின் பெரும்பாலான மக்களைக் கொன்றுவிட்டார்கள். சில மக்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் திரும்பி வந்து அவர்களின் கைதிகளையும் விடுதலை செய்துவிட்டார்கள்.

ஆனால், அவர்கள் திரும்பிச் சென்று போருக்கான ஆயத்தத்தை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டனர். ஆகவே, பனூ அம்ர் பின் பனூ ஹாரிஸ், அஷ்அஸ் பின் கைஸ் மற்றும் ஸம்த் பின் அஸ்வத் ஆகிய கோத்திரங்கள் தத்தமது போர்க்கால அகழிகளுக்குள் சென்றுவிட்டார்கள். அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்து முர்தத் ஆகிவிட்டார்கள்.

இதனால், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் படையை ஒன்று திரட்டி பனூ அம்ர் மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். அந்த மக்களில் பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டனர். எவர்களால் தப்பி ஓட முடிந்ததோ அவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்களைக் கைது செய்து மதீனாவுக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். வழியில், அஷ்அஸ் மற்றும் பனூ ஹாரிஸ் கோத்திரத்தினர் தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களிடமிருந்து தங்களது கைதிகளை விடுவித்துக் கொண்டார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, அக்கம்பக்கத்தின் பல கோத்திரங்கள் அந்த மக்களுடன் இணைந்து கொண்டன. அவர்களும் முர்தத் ஆனதாக அறிவிப்பு செய்துவிட்டார்கள். இதனால், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் உதவிக்காக ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களைத் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். பிறகு, தமது தோழர்களை அழைத்துக் கொண்டு தாமே கிந்தா மீது தாக்குதல் தொடுத்தார்கள்.

கிந்தா வாசிகள் தப்பி ஓடி, நுவைர் எனும் தமது ஒரு கோட்டையில் அடைபட்டுவிட்டார்கள். இதுவும் ஹஸ்ரமௌத்துக்கு அருகில் இருந்த ஏமனின் ஒரு கோட்டையாகும். இந்தக் கோட்டைக்கு மூன்று வழிகள் இருந்தன. ஒரு வழியில் ஹஸ்ரத் ஸியாத் (ரலி) இறங்கிவிட்டார்கள். இரண்டாவது வழியில் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) முகாமிட்டுவிட்டார்கள். மூன்றாவது வழி கிந்தாவின் ஆதிக்கத்திலேயே இருந்தது. எதுவரை என்றால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) வந்தடைந்து, அந்த வழியைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஸியாத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களின் படை ஐயாயிரம் முஹாஜிர் மற்றும் அன்சாரி சஹாபிகளையும் ஏனைய கோத்திரங்களையும் உள்ளடக்கியிருந்தது. நுவைர் கோட்டையில் அடைபட்ட மக்கள் முஸ்லிம்களுக்குத் தொடர்ச்சியாக உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தபோது, திகிலடைந்து போனார்கள். இந்தக் காரணத்தினால் அவர்களது தலைவன் அஷ்அஸ் உடனடியாக ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களிடம் சென்று

உயிருக்கு உத்திரவாதம் வழங்கக் கோரினான்.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அஷ்அஸை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அஷ்அஸ் தனக்காகவும், தன்னுடன் இருந்த ஒன்பது பேருக்காகவும், அவர்கள் முஸ்லிம்களுக்காகக் கோட்டைக் கதவைத் திறந்து விடுவார்கள் என்ற நிபந்தனையின் பேரில் உயிருக்கு உத்திரவாதம் கேட்டான்.

ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள். அஷ்அஸ் ஒன்பது பேருடைய பெயர்களை எழுதியபோது, அவசரத்தினாலும், அச்சத்தினாலும் தனது பெயரை எழுத மறந்துவிட்டான். பிறகு, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களிடம் எழுந்து மடலை எடுத்துச் சென்றான். அதில் அவர்கள் முத்திரை பதித்துவிட்டார்கள். பிறகு, அஷ்அஸ் திரும்பிச் சென்றுவிட்டான். அவன் கோட்டைக் கதவைத் திறந்ததும் முஸ்லிம்கள் அதில் நுழைந்துவிட்டனர்.

இருதரப்பினருக்கும் இடையிலான சண்டையில் கிந்தா வாசிகள் 700பேர் கொல்லப்பட்டனர். அதாவது, கோட்டையில் இருந்தவர்களும் போர் புரிந்தனர். சண்டையிட்டனர். எவ்வாறு இருப்பினும், அவர்களின் ஆண்கள் கொல்லப்பட்டனர். ஓராயிரம் பெண்கள் கைது செய்யப்பட்டனர். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் பாதுகாப்புப் பத்திரத்தை வரவழைத்தார்கள். அதில் குறிப்பிடப்பட்டிருந்த எல்லா மக்களையும் மன்னித்துவிட்டார்கள்.

ஆனால், அதில் அஷ்அஸ் உடைய பெயர் இருக்கவில்லை. இதனால், ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் அவனைக் கொல்ல எண்ணம் கொண்டுவிட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவனை மற்ற கைதிகளுடன் சேர்த்து, அவன் தொடர்பாகவும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே தீர்மானிக்கட்டும் என்று அவனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டார்கள்.

முஸ்லிம்கள் வெற்றிச் செய்தியுடனும், கைதிகளுடனும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தபோது, அன்னார் அஷ்அஸை வரவழைத்தார்கள். நீ பனூ வலிய்யாவுடைய ஏமாற்றத்திற்கு ஆளாகிவிட்டாய். நீ அவர்களை ஏமாற்றும் அளவுக்கு அவர்கள் இருந்திருக்கவில்லை. அவர்களும் உன்னை இந்தப் பணியை செய்பவனாகக் கருதவில்லை. அவர்கள் தாமும் அழிந்தார்கள். உன்னையும் அழித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தண்டனை கிடைப்பதற்காக செய்த துஆவின் ஒரு பங்கு உன்னை வந்தடைந்ததைக் கண்டு நீ அஞ்சவில்லையா? என்று கேட்டார்கள். உண்மையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கிந்தா கோத்திரத்தின் நான்கு தலைவர்கள் மீது சாபமிட்டிருந்தார்கள். அவர்கள் அஷ்அஸோடு சேர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர். பிறகு, முர்தத் ஆகிவிட்டனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் உன்னோடு எப்படி நடந்து கொள்வேன் என்று நீ நினைக்கிறாய்? என்று கேட்டார்கள். அஷ்அஸ், எனக்குத் தங்களது எண்ணம் என்ன என்று தெரியாது? என்றான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், உன்னைக் கொன்றுவிட வேண்டும் என்று நினைக்கிறேன் எனக் கூறினார்கள். அவன், நான் எனது சமுதாயத்தின் பத்து நபர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உடன்படிக்கை செய்தவன் ஆவேன். என்னைக் கொல்வது எப்படித் தகும்? என்று கேட்டான்.

அன்னார் (ரலி) கேட்டார்கள்: முஸ்லிம்கள், விவகாரத்தை உன்னிடம் ஒப்படைத்தார்களா? அவன் கூறினான்: ஆம். அன்னார் கூறினார்கள்: எழுத்து மடலில் முத்திரை பதிக்கப்பட்ட பிறகு, அதில் எழுதப்பட்டிருந்ததற்கு ஏற்ப சமரசம் செய்வது அவசியம் ஆகிவிட்டது. இதற்கு முன் நீ சமரசத்திற்கான பேச்சு வார்த்தையை மட்டும் தான் நடத்தினாய். அஷ்அஸ், நான் கொல்லப்பட்டுவிடுவேன் என்று அஞ்சியபோது, அவன் கூறினான்: தாங்கள் என்னிடம் ஏதாவது நன்மைக்கான நம்பிக்கை வைத்திருந்தால் இந்தக் கைதிகளை விடுதலை செய்துவிடுங்கள். எனது பிழைகளை மன்னித்தருளுங்கள். நான் இஸ்லாத்தை ஏற்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். என்னைப் போன்றவர்களுடன் தாங்கள் நடந்து கொள்வதைப் போன்றே என்னிடமும் நடந்து கொள்ளுங்கள். எனது மனைவியை எனக்குத் திருப்பி தந்துவிடுங்கள்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்த சம்பவத்திற்கு முன்னர் ஒருமுறை அஷ்அஸ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானான். அவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சகோதரி உம்மு ஃபர்வா பின்த் அபீ கஹாஃபாவுக்குத் திருமண தூது அனுப்பினான்.ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மகளை அவனுக்கு மணமுடித்துக் கொடுத்துவிட்டிருந்தார்கள். அஷ்அஸ் மீண்டும் வரும்போது, ருக்ஸதானா வைத்துக் கொள்ளலாம் என்று இருந்தார்கள். அதாவது, மீண்டும் வருவான் அப்போது ருக்ஸத்தீ நடக்கட்டும் என்று இருந்தார்கள்.

உம்மு ஃபர்வா அவர்களை, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் என்றும், ஓர் எழுத்தாளர் கூறியுள்ளார். எவ்வாறு இருப்பினும், பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். அஷ்அஸ் முர்தத் ஆகவும், கிளர்ச்சியாளனாகவும் ஆகிவிட்டான். எனவே, அவனது மனைவி அவனிடம் ஒப்படைக்கப்பட மாட்டார் என்ற அச்சம் அவனுக்கு ஏற்பட்டது. அஷ்அஸ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், தாங்கள் என்னை அல்லாஹ்வின் மார்க்கத்துக்காக, தங்களது பகுதி மக்களில் சிறந்தவர்களில் ஒருவராகக் காண்பீர்கள் என்று பணிவுடன் கூறினான்.

இதனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனை உயிரோடு விட்டார்கள். அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை ஏற்றுக் கொண்டார்கள். அவனது வீட்டு மக்களை அவனிடம் ஒப்படைத்துவிட்டார்கள். மேலும். கூறினார்கள்: செல்! எனக்கு உன்னைப் பற்றி நல்ல செய்திகள் கிடைக்கட்டும்.

இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து கைதிகளையும் விடுதலை செய்துவிட்டார்கள். இவ்வாறு, அவர்கள் அனைவரும் தத்தமது பகுதிகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

(தாரீகே தபரீ தொகுதி 2, பக்கம் 300, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012) (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 240-241, புக் கார்னர் ஷோரூம், ஜஹ்லம்) (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் மொழியாக்க நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள் பக்கம் 537-538, அல் ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட்)

ஓர் அறிவிப்பின்படி, தனது சமுதாயத்திடம் வாக்குறுதி மீறியதனால், அஷ்அஸுக்குத் தனது கோத்திரத்துக்குத் திரும்பிச் செல்ல தைரியம் இல்லை. விடுதலை செய்யப்பட்ட பிறகு, உம்மு ஃபர்வாவுடன் மதீனாவில் தங்கினான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈராக் மற்றும் சிரியா போர்கள் முன்வந்தபோது, அஷ்அஸும் இஸ்லாமிய படைகளுடன் இணைந்து ஈரானியர்களுடனும், ரோமானியர்களுடனும் போர் புரிவதற்காக வெளியேறினான். மேலும், தெளிவாகத் தென்படும் நற்பணிகளை செய்து காட்டினான். அதனால், மக்களின் பார்வையில் மீண்டும் அவனது கௌரவம் அதிகரித்துவிட்டது. தொலைந்து போன அவனது கண்ணியம் மீண்டும் திரும்பி வந்தது.

சுருக்கமாக, முழுமையாக அமைதி நிலவாத வரை இஸ்லாமிய அரசாங்கத்தின் அடித்தளங்கள் உறுதி பெறாத அந்த நேரம் வரை, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் ஹஸ்ரமௌத் மற்றும் கிந்தாவிலேயே தங்கியிருந்தார்கள்.

இது, கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு

எதிரான கடைசி போராகும். இந்தக் கிளர்ச்சியாளர்களுக்குப் பிறகு, அரபு நாட்டிலிருந்து கிளர்ச்சி முழுமையாக முடிவுக்கு வந்துவிட்டது. எல்லாக் கோத்திரங்களும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்துவிட்டன.

ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் இந்தப் பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்வதற்காகவும் கிளர்ச்சியை, கலகத்தை முழுமையாக அழித்தொழிப்பதற்காகவும் தாம் ஏமனில் செயல்பட்டது போன்றே கண்டிப்புடன் செயல்பட்டார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் மொழியாக்க நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 241, அல் ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட்)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு ஏமன் அல்லது ஹஸ்ர மௌத் ஆகிய இரண்டு இடங்களில் ஏதாவது ஓர் இடத்தை தேர்வு செய்து கொள்வது பற்றி எழுதினார்கள். அன்னார் ஏமனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இவ்வாறு இரண்டு அமீர்மார்கள் ஏமனில் நியமிக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராகப் பணியாற்றும் அதிகாரிகளுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:

அம்மா பஃது! என்னுடைய பார்வையில், நீங்கள் அனைவரும் ஆளுமையில் முர்தத் ஆகுதல், கிளர்ச்சி செய்தல் எனும் களங்கம் ஏற்பட்டிராத மக்களை மட்டும் இணைத்துக் கொள்வதே மிகவும் பிடித்தமான விஷயம் ஆகும். அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள்தான். ஆனாலும், முன்னர் முர்தத் ஆனவர்களோ அல்லது கிளர்ச்சி செய்தவர்களோ அதில் இருக்கின்றார்களா? என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிறகு இதையும் கூறினார்கள்: நீங்கள் அனைவரும் இதன்படியே செயல்படுங்கள். இதை கடைபிடியுங்கள். யாரெல்லாம் படைக்குத் திரும்பி வர விரும்புகிறார்களோ அவர்களுக்குத் திரும்பி வர அனுமதி கொடுத்து விடுங்கள். மேலும், எதிரிகளோடு போர் புரிவதற்கு எந்தக் கிளர்ச்சி செய்த முர்ததிடமிருந்தும் ஒருபோதும் உதவி பெறாதீர்கள்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 305, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

பெரும்பாலான எழுத்தாளர்கள், குறிப்பாக இந்தக் காலத்தின் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர்கள் பொதுவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்தப் போர்களைப் பற்றி எடுத்துரைத்த வண்ணம் இவ்வாறு கூறுகிறார்கள்:

யாரெல்லாம் பொய் நபித்துவ வாதம் புரிந்துள்ளார்களோ அவர்களுக்குத் எதிராக இந்தப் போர்கள் அனைத்தும் செய்யப்பட்டன. வாளைக் கொண்டு அவர்கள் வேரறுக்கப்பட்டார்கள். ஏனென்றால், இதுவே அவர்களுக்கான ஷரீஅத்தின் தண்டனையாக இருந்தது. ஆனால், வரலாற்றையும் வாழ்க்கை வரலாற்றையும் படிக்கக் கூடியவரால் ஒருபோதும் இந்த விஷயத்தை ஆதரிக்க முடியாது.

திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நடைமுறை மற்றும் அருளுக்குரிய நபிமொழிகளின் ஒளியில் முன்னரே கூறப்பட்டுவிட்டது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வெறும் நபித்துவ வாதம் புரிந்ததனால் மட்டும் ஒருபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் போர் நடவடிக்கைகளும் வெறும் பொய் நபித்துவ வாதிகளை வேரறுக்க வேண்டும் என்பதற்காக இருக்கவில்லை. மாறாக, அந்த மக்களுடைய அசல் சிந்தனையாகக் கிளர்ச்சி செய்யும் நடைமுறை இருந்தது.

ஆக, நபித்துவ வாதம் புரிந்தவர்களுடன் சஹாபிகள் ஏன் போர் புரிந்தார்கள்? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு,நபித்துவ வாதம் புரிந்த ஒவ்வொரு நபருக்கு எதிராகவும், சஹாபா பெருமக்கள் போர் புரிந்தார்கள் என்று மவ்லானா மௌதூதி அவர்கள் எழுதியிருப்பது சஹாபிகளின் கூற்றுகளுக்கு எதிரானதாகும். மவ்லானா மௌதூதி சாஹிப் நினைவில் கொள்ள வேண்டும். (அவருடைய வாழ்நாளில் கூறுகிறார்கள்)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு, எந்த மக்களெல்லாம் நபித்துவ வாதம் புரிந்தார்களோ எவர்களோடு சஹாபிகள் போர் புரிந்தார்களோ அவர்கள் அனைவரும் இஸ்லாமிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள்.

மேலும், இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராகப் போருக்கான அறிவிப்பு செய்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

மவ்லானா அவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களைப் படித்ததாகப் பெரிதும் வாதிடுகிறார். அந்தோ! அவர் இந்த விஷயம் தொடர்பாகக் கருத்து கூறும் முன்னர், இஸ்லாமிய வரலாற்றைப் படித்துப் பார்த்திருந்தால் அவருக்குத் தெரிய வந்திருக்கும். அதாவது, முஸைலமா கஸ்ஸாப், அஸ்வத் அன்ஸீ, ஸஜ்ஜாஹ் பின்த் ஹாரிஸ் மற்றும் துலைஹா பின் குவைலத் அஸதீ ஆகிய அனைவரும் எப்படிப்பட்ட மக்களாக இருந்தனர் என்றால், அவர்கள் மதீனாவின் ஆட்சிக்குக் கட்டுப்பட மறுத்துவிட்டனர்.

மேலும், தத்தமது பகுதிகளில் தத்தமது ஆட்சிக்கான அறிவிப்பை செய்திருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இப்னு குல்தூன் வரலாற்று நூலை கவனமாகப் படிப்பீர்களாயின், மவ்லானா சாஹிப் அவர்களின் கண்ணோட்டம் தவறு என்பது தெளிவாகிவிடும். ஆக, அங்கு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

அரபு நாடு முழுவதும் பொது மக்கள் ஆகட்டும்! முக்கியஸ்தர்கள் ஆகட்டும்! அவர்கள் முர்தத் ஆன செய்திகள் மதீனா வந்தடைந்தன. குரைஷ் மற்றும் ஸகீஃப் ஆகிய இரு கோத்திரங்கள் மட்டுமே முர்தத் ஆவதிலிருந்து தவிர்ந்திருந்தன.

முஸைலமா விவகாரம் மிகவும் ஆற்றல் பெற்றிருந்தது. தே மற்றும் அஸத் ஆகிய கோத்திரங்கள் துலைஹா பின் குவைலதுக்குக் கட்டுப்படுவதை ஏற்றுக் கொண்டிருந்தன. கத்ஃபான் கோத்திரமும் முர்தத் ஆவதை ஏற்றுக் கொண்டது. ஹவாஸான் கோத்திரமும் ஸகாத்தை நிறுத்தி விட்டது. பனூ ஸலீமின் தலைவர்களும் முர்தத் ஆகிவிட்டனர். ஏமன், யமாமா, பனூ அஸத், மற்றும் இதர பல பகுதிகளிலும், நகரங்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அமீர்மார்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் கூறினார்கள்:

அரேபியர்களில் பெரியவர்கள், சிறியவர்கள் என அனைவரும் கட்டுப்பட மறுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் திரும்பி வரட்டும். பிறகு, அவர்களுடன் இணைந்து போர் புரியலாம் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அபஸ் மற்றும் ஸுப்யான் கோத்திரங்கள் அவசரப்பட்டன. அவர்கள் மதீனாவுக்கு அருகில் உள்ள அப்ரக் எனும் இடத்திற்கு வந்து முகாமிட்டுவிட்டார்கள். வேறு சில மக்கள் ஸுல் கிஸ்ஸா பகுதிக்கு வந்து முகாமிட்டுவிட்டார்கள். அவர்களுடன் மனூ அஸத் கோத்திரத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்களும் இருந்தார்கள். பனூ கனானாவைச் சேர்ந்த சில மக்களும் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள்.

அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி பிரதிநிதிக் குழுவை அனுப்பினார்கள். தொழுகை வரையிலான தங்கள் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். (அந்த மக்கள் மதீனாவின் சுற்றுவட்டாரத்தில் ஒன்று கூடிவிட்டார்கள்). அதாவது தொழவேண்டும் என்பது வரை பேச்சைக் கேட்பதற்கு தயாராக உள்ளோம்: ஆனால், ஸகாத் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை என்று கோரிக்கை

வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களின் இந்த விஷயத்தை நிராகரித்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இது தொடர்பாகத் தெளிவான விஷயமாவது, சஹாபா பெருமக்கள் யாருடனெல்லாம் போர் புரிந்தார்களோ, அம்மக்கள் அரசாங்கத்துக்கு எதிரானவர்களாக இருந்தார்கள். வரி கொடுக்க மறுத்திருந்தார்கள். மதீனா மீது தாக்குதல் தொடுத்திருந்தார்கள். இங்கு பேச்சை கேட்கவில்லை என்றால், நாம் தாக்குதல் தொடுக்கலாம் என்று மதீனாவின் சுற்றுவட்டாரத்தில் ஒன்று திரண்டு இருந்தார்கள்.

முஸைலமா சுயமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் அன்னாருக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தான்:

அரேபியாவின் பாதி நாடு எங்களுக்குரியதாகும். பாதி நாடு குரைஷியர்களுக்கு உரியதாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அவன் ஹஜர் மற்றும் யமாமாவிலிருந்து அன்னாரால் நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர் ஸமாமா பின் உஸால் அவர்களை வெளியேற்றி விட்டு, சுயமே அந்தப் பகுதியின் ஆளுநராக ஆகியிருந்தான். அவன் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்துவிட்டான். இவ்வாறே, மதீனாவின் இரண்டு சஹாபிகள், ஹபீப் பின் ஸைத் மற்றும் அப்தில்லாஹ் பின் வஹப் ஆகியோரை அவன் சிறைபிடித்து விட்டான். அவர்களை வலுகட்டாயமாக தனது நபித்துவத்தை ஏற்றுக் கொள்ள வைக்க விரும்பினான்.

இது குறித்து முன்னரும் கூறப்பட்டுவிட்டது. அப்துல்லாஹ் பின் வஹப் அவர்கள் பயந்துபோய் அவன் கூறியதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் ஹபீப் பின் ஸைத் (ரலி) அவர்கள் அவன் கூறியதை ஏற்க மறுத்துவிட்டார்கள். இதனால், அன்னாரை ஒவ்வொரு அங்கமாக வெட்டி நெருப்பில் முஸைலமா எறிந்துவிட்டான். இவ்வாறே ஏமனிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளில் சிலரைக் கைது செய்துவிட்டான். சிலருக்குக் கடுமையான தண்டனைகள் கொடுத்தான்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இவ்வாறே தபரீ எழுதியுள்ளார்கள்:

அஸ்வத் அன்ஸீயும் கிளர்ச்சிக் கொடியை ஓங்கச் செய்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்ளால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுக்குத் தொல்லை கொடுத்தான். அவர்களிடமிருந்து ஸகாத்தைப் பறித்துக் கொள்வதற்கான கட்டளையிட்டான். பிறகு, ஸன்ஆவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி ஷஹ்ர் பின் பாஸான் மீது தாக்குதல் தொடுத்தான். பல முஸ்லிம்களைக் கொன்றான். செல்வங்களை சூரையாடினான். ஆளுநரைக் கொன்றுவிட்டான். அவரைக் கொன்ற பிறகு, அவருடைய முஸ்லிம் மனைவியோடு வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து கொண்டான். பனூ நஜ்ரான் கோத்திரத்தினரும் கிளர்ச்சி செய்தனர். அவர்களும் அஸ்வத் அன்ஸீயுடன் இணைந்து கொண்டனர். அவர்கள் அம்ர் பின் ஹஸ்ம் மற்றும் காலித் பின் ஸயீத் ஆகிய இரண்டு சஹாபிகளை அந்தப் பகுதியை விட்டு வெளியேற்றிவிட்டார்கள்.

இந்த சம்பவங்களிலிருந்து வெளிப்படுவதாவது, நபித்துவ வாதம் புரிந்தவர்களுடன் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தில் நபித்துவத்திற்கான வாதம் புரிந்தார்கள் என்பதனாலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்புவதற்கான வாதம் புரிந்தார்கள் என்பதாலும் (அவர்களுக்கு எதிராக) போர் செய்யப்படவில்லை.

மாறாக, அந்த மக்கள் இஸ்லாமிய ஷரீஅத்தை நீக்கிவிட்டு தமது சட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள். தமது பகுதியின் ஆட்சிக்கான வாதம் புரிந்தார்கள். தமது பகுதியின் ஆட்சிக்கான வாதம் மட்டுமே புரியவில்லை. அதற்கும் மேற்பட்டு சஹாபா பெருமக்களைக் கொன்றார்கள். இஸ்லாமிய நாடுகள் மீது போர் தொடுத்தார்கள். நிலைபெற்றிருந்த அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்து தமது சுதந்திரத்திற்கான அறிவிப்பு செய்தார்கள். எனவே, இந்தக் காரணங்களுக்காக மட்டுமே சஹாபா பெருமக்கள் அவர்களுடன் போர் புரிந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இந்த சம்பவங்கள் இருக்கையில், மவ்லானா மௌதூதி சாஹிப், ஹஸ்ரத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லா சஹாபா பெருமக்களும் நபித்துவ வாதம் புரிந்தவர்களை எதிர்த்துப் போர் செய்தார்கள் என்று கூறுவது, பொய் அல்லாமல் வேறு என்ன? சஹாபா பெருமக்கள் மனிதர்களைக் கொல்வதை ஆகுமானதாக ஆக்கியிருந்தார்கள் என்று எவராவது கூறினால், முஸைலமா கஸ்ஸாபும் மனிதனாக இருந்தான்: அஸ்வத் அன்ஸீயும் மனிதனாக இருந்தான் என்ற காரணத்தினால் மட்டும் அது சரியாகி விடுமா?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

எவர்கள் இஸ்லாமிய வரலாற்றைத் திரித்துக் கூறுகிறார்களோ அவர்கள் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றவில்லை. இஸ்லாத்திற்குத் தொண்டாற்றுவது அவர்களது நோக்கம் என்றால் அவர்கள் எல்லாவற்றைக் காட்டிலும் உண்மைக்குப் பெரிய அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும்.

தவறாகக் கூறுவதை விட்டும் நிகழ்வுகளைத் திரித்துக் கூறுவதை விட்டும் முழுமையாகத் தவிர்ந்திருக்க வேண்டும்.

மவ்லானா மௌதூதியின் காதியான் என்ற நூலிற்கு பதில், அன்வாருல் உலூம் தொகுதி 24, பக்கம் 11-14)

எவ்வாறு இருப்பினும், அரபு நாட்டிலிருந்து இவர்கள் அனைவரும் முடிந்து போனதால், கிளர்ச்சிகள் முழுமையாக முடிவுக்கு வந்துவிட்டன. ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார்:

இப்போது அரபு நாட்டின் கிளர்ச்சிகள் அனைத்தும் முடிவுக்கு வந்து இருந்தன. எல்லா முர்தத்களும் தண்டிக்கப்பட்டு இருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நாடு தழுவிய இந்தக் குழப்பத்தை எந்த அளவு துரிதமான முறையிலும், அழகான திட்டம் வகுத்தலாலும் வேரறுத்தார்கள் என்றால் அது அன்னாரின் உயர்த்தகுதிகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளது.

அன்னாருக்கு ஒவ்வோர் அடியிலும், எவ்வாறு இறை ஆதரவும், உதவியும் கிடைத்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஓராண்டுக்கும் குறைவான காலத்தில் முர்தத் ஆகுதல், கிளர்ச்சி செய்தல் எனும் குழப்பத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவது மற்றும் அரபு மண்ணில் இஸ்லாமிய ஆட்சியை மீண்டும் நிலைநாட்டி விடுவது என்பது ஒரு வியக்கத்தக்க சிறப்பு பணியாகும்.

இஸ்லாத்தின் வெற்றியால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அளவு கடந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மகிழ்ச்சி இருந்தது. ஆனால், இந்த மகிழ்ச்சியில் ஆணவமும், அகங்காரமும் பெயருக்குக் கூட இருக்கவில்லை. ஏனென்றால், என்ன நடந்ததோ அது அல்லாஹ்வின் அருளாலும், கருணையினாலும் மட்டுமே நிகழ்ந்தது என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள்.

கையளவு முஸ்லிம்கள் மூலமாக முழு அரபு நாட்டிலும் உள்ள முர்தத்களின் வீறிய படையை எதிர்த்துப் போரிட்டு அவர்களைத் தோற்கடித்து இஸ்லாத்தின் கொடியை மிகவும் மேன்மையுடனும், கம்பீரத்துடனும் மீண்டும் உயர்த்தக் கூடிய ஆற்றல் அன்னாருக்கு இருக்கவில்லை. இப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு, மார்க்கத்தின் ஒருமைப்பாட்டை உறுதிபடுத்துவதற்கும் இஸ்லாத்தை உச்சத்திற்குக் கொண்டு செல்வதற்கும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற விவகாரம் முன்னால் இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசியல் முழுவதும் இஸ்லாத்தின் கம்பீரத்தை மட்டுமே சுற்றி வந்தது. இந்த ஆசையே ஒவ்வொரு நொடிப்பொழுதும் அன்னாரின் உள்ளத்திலும் சிந்தனையிலும் இருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 243-244, மொழிபெயர்ப்பாளர் அன்ஜும் சுல்தான் ஷஹ்பாஸ், புக் கார்னர் ஷோரூம், ஜஹ்லம்)

கிளர்ச்சி செய்த முர்தத்களை முற்றிலும், வேரறுத்த பிறகு, இப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபாவுக்கு முன்னால் எந்தக் கிளர்ச்சியாராலும் நிற்க முடியாது என்று ஒவ்வொருவருக்கும் உறுதியாகத் தெரிந்து விட்டது.

ஆனால், பொதுமக்களைப் போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த தப்பெண்ணத்திற்கும் இரையாகவில்லை. முர்தத் ஆகுதல் மற்றும் கிளர்ச்சி செய்தல் எனும் உறங்கிக் கொண்டிருக்கக் கூடிய குழப்பத்தை வெளிப்புற ஆற்றல்கள் மீண்டும் தட்டியெழுப்பி அமைதியை சீர்குலைப்பதற்குக் காரணிகளாக ஆக முடியும் என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். இந்தக் குழப்பம் தற்காலிகமாக உறங்கியிருக்கலாம் என்று அன்னார் எண்ணினார்கள். வெளிப்புற ஆற்றல்கள் என்பது, அரேபியாவின் எல்லைப் பகுதிகளில் இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்த பெரும் பெரும் அரசாங்கங்கள் ஆகும். அவை மீண்டும் அமைதியின்மையை ஏற்படுத்த முடியும். எனவே, அன்னார் எந்த ஒரு தப்பெண்ணத்திலும் மூழ்கியிருக்கவில்லை. ஏற்படுவதற்கு சாத்தியமான இந்தக் குழப்பத்தின் நெருப்பிலிருந்து அரபுக் கோத்திரங்கள் தப்பிப்பதற்காக, அரபுக் கோத்திரங்களின் கவனத்தை ஈரான் மற்றும் சிரியாவின் பால் திருப்புவது பொருத்தமானதாகக் கருதப்பட்டது. இவ்வாறு அரசாங்கத்துக்கு எதிராகக் குழப்பம் விளைவிப்பதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு அமைதி கிடைத்தது. மன நிம்மதியோடு அவர்களால் மார்க்கத்தின் கட்டளைகளை நிறைவேற்ற முடிந்தது.

(ஹகீம் குலாமி நபி M.A அவர்களின் ஸய்யிதுனா சித்தீகே அக்பர், பக்கம் 178)

ஆகவே, அரபு நாட்டின் எல்லைப்புறங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவும், இஸ்லாமிய அரசாங்கத்தைத் தனது வலிமையான எதிரியிடமிருந்து பாதுகாப்பதற்காகவும் அந்த ஆற்றல் மிகுந்த சமுதாயங்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பது அவசியம் ஆகிவிட்டது.

அப்போதுதான் அந்த சமுதாயத்தினர் இஸ்லாத்தின் உலகளாவிய தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டு அல்லது புரிந்து கொண்டு தாமும் அமைதியாகவும், சமாதானத்துடனும் வாழ்வைக் கழிப்பார்கள். மற்றவர்களும், அவர்கள் தம் மீது ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து பாதுகாப்பாகவும், அமைதியாகவும், நிம்மதியாகவும், சுதந்திரமான முறையிலும் தத்தமது மார்க்கத்திலும் மதத்திலும் நிலைபெற்றிருக்க முடியும்.

எவ்வாறு இருப்பினும், இதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்ன வழியை, எந்த ஹிக்மத்தான செயலை மேற்கொண்டார்கள் என்பது தொடர்பாக வரலாற்று நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும், போர்களும் முடிவடைந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்கள். அதாவது, அரேபியாவுக்கும், முஸ்லிம்களுக்கும் நீண்ட கால எதிரிகளான ஈரான் மற்றும் ரோமானிய அரசாங்கங்களிடமிருந்து நிரந்தரமாகப் பாதுகாப்பாக இருப்பதற்கு என்ன செயல் முறை வகுக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏனெனில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்திலும், இவ்விரு வல்லரசுகளும் அரேபியாவைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைக்க விரும்பின. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்த பிறகு, பல பகுதிகளிலும் கோத்திரங்களிலும் முர்தத் ஆகுதல் மற்றும் கிளர்ச்சி செய்தல் எனும் எரிந்த, நெருப்பானது மதீனாவின் ஆட்சிப் பகுதியை சுற்றி வளைத்துவிட்டது.

அப்போது, சில இடங்களில் அதற்குப் பின்னால் இந்த வல்லரசுகளின் ஒரு கையும் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பொன்னானதாகக் கருதி ஹர்கல் உடைய படைகள் சிரியாவிலும், ஈரான் உடைய படைகள் ஈராக்கிலும் ஒன்று திரள ஆரம்பித்தன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கட்டளையை செயல்படுத்தும் விதமாக, எல்லாவற்றிற்கும் முதலாவதாக ரோமானியர்களுக்கு எதிராக ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் தலைமையில் முதல் படையை அனுப்பியிருந்தார்கள்.

எனவே, உரிமையைப் பறிக்கும் மற்றும் கொடுங்கோலாட்சி புரியும் அந்த சக்திகளைக் குறித்து அச்சமில்லாமல், கவலை இல்லாமல் இருப்பது சாத்தியமாகவே இருக்கவில்லை.

ஆனால், அன்னார் (ரலி) தற்போது எல்லாருக்கும் முன்னும், ஒரு செயல் திட்டத்தை வைப்பதற்கு முன்னர் பஹ்ரைனில் கிளர்ச்சி செய்த முர்தத்களின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதில் உதவி புரிந்த, ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் தமது தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு பாரசீக வளைகுடாவின் கரையோரத்தை ஒட்டிய வடக்குப் பகுதியின் வழியாக ஈராக்கை நோக்கி முன்னேற ஆரம்பித்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது.

இறுதியில், அவர்கள் டைகிரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகளின் டெல்டா பகுதிகளில் வசித்து வந்த அந்த அரபு கோத்திரங்களைச் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் பஹ்ரைனின் ஒரு கோத்திரமான பக்ர் பின் வாயிலைச் சேர்ந்தவர் ஆவார்கள். பஹ்ரைன் யமாமாவுக்கும், பாரசீக வளைகுடாவுக்கும் இடையில் அமைந்திருந்தது. அதில் தற்போதைய கத்தார், எமிரேடுகள் மற்றும் பஹ்ரைனின் தீவுகளும் இருந்தன. அதன் தலைநகரமாக தாரைன் இருந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களோடு இணைந்து முர்தத்களோடும் போர் புரிந்து இருந்தார்கள். பஹ்ரைன் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் எவர்கள் எல்லாம் இஸ்லாத்தில் நிலைத்து நின்றார்களோ, எவர்கள் இஸ்லாமிய படைகளுடன் இணைந்து முர்தத்களுக்கு எதிரான போரில் கலந்து கொண்டார்களோ அவர்களின் தலைவராக ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருங்கால நடவடிக்கை பற்றி தற்போது முடிவு எதுவும் எடுக்க முடியாத நிலையில்,

ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் தாமே மதீனாவுக்கு வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஈராக்கின் நிலைமைகள் பற்றித் தெரியப்படுத்தினார்கள். அதாவது, டைகிரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகளின் டெல்டா பகுதிகளில் வசித்து வந்த அந்த அரபு கோத்திரங்கள் அங்குள்ள உள்ளூர் வாசிகளின் கைகளால் துன்பத்தில் ஆழ்ந்துள்ளார்கள். அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கப்படுகிறது.

அரேபியர்கள் பெரும்பாலும் விவசாயம் செய்வார்கள். விளைச்சல் வரும்போது, உள்ளூர் மக்கள் சூரையாடி விடுவார்கள். எனவே, ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் இஸ்லாமிய படைகளை அனுப்பி அந்த மக்களைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவின் கருத்து கூறும் தகுதியுள்ள மக்களிடம் ஆலோசனை செய்தார்கள். ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் கருத்தை முன் வைத்தார்கள். மதீனத்து மக்கள் ஈராக்கின் நிலைமையைப் பற்றி அறியாதவர்களாக இருந்தனர்.

எனவே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை வரவழைத்து முழு விவகாரமும் அவர்கள் முன் வைக்கப்பட்டு அவர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அந்த நாட்களில் யமாமாவில் இருந்தார்கள். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை மதீனாவுக்கு வரவழைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மதீனா வந்தடைந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஈராக் மீது படையெடுப்பது பற்றி ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களின் ஆலோசனையை அன்னார் முன் வைத்தார்கள்.

அப்போது, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களும் என்ன கருதினார்கள் என்றால், ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் ஈராக்கின் எல்லையில் ஈரானியர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் (இறைவன் அவ்வாறு நாடாதிருக்கட்டுமாக) ஒருவேளை தோல்வி அடைந்துவிட்டால் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களின் படை அரேபியாவின் பக்கம் பின்வாங்க நேரிட்டுவிட்டால், பின்னர் ஈரானிய அதிகாரிகள் இன்னும் துணிச்சல் கொண்டு விடுவார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களின் படையை ஈராக்கின் எல்லையை விட்டு வெளியேற்றுவதை மட்டுமே போதுமானதாகக் கருத மாட்டார்கள். அதற்கும் மேற்பட்டு, பஹ்ரைன் மற்றும் அத்துடன் இணைந்துள்ள பகுதிகளில் மீண்டும் தாக்கத்தையும் செல்வாக்கையும் ஏற்படுத்துவதற்காகவும், ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும் முயற்சி செய்வார்கள். இப்படிபட்ட சூழ்நிலையில் இஸ்லாமிய அரசுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

எனவே, அன்னாரும் என்ன கூறினார்கள் என்றால், இந்த ஆபத்திலிருந்து தப்பிப்பதற்காக நிச்சயம் உதவிப்படை அனுப்பப்பட வேண்டும். அதாவது, ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களுக்கு அங்கு படை அனுப்ப வேண்டும். ஈரானியர்களை அரேபியாவின் எல்லையில் தாக்கத்தையும், செல்வாக்கையும் ஏற்படுத்தவிடுவதற்கு பதிலாக, மேற்கொண்டு பின்னோக்கிச் செல்ல நிர்பந்திக்க வேண்டும். அப்போது, தான் அவர்கள் தரப்பிலிருந்து ஒருபோதும் அரேபியாவுக்கு எந்த ஆபத்தும் எஞ்சியிருக்காது.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது இந்த ஆலோசனையை முன்வைத்ததும், அன்னாரின் இந்த ஆலோசனையைக் கேட்ட பிறகு சஹாபா பெருமக்களும் கூட ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். எவர்களை உடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் ஈராக்கின் எல்லைகளில் முன்னேறிச் சென்றார்களோ அந்த மக்களின் தலைவராக ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆக்கிவிட்டார்கள்.

தற்போது அங்குள்ள அரபு கோத்திரங்களை உடன் இணைப்பதற்கும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கும் அவர்களை இணங்க வையுங்கள் என்று கட்டளையிட்டார்கள். அத்துடன், அவர்களுக்கு உதவி செய்வதற்காக விரைவாக மதீனாவிலிருந்து ஒரு படை அனுப்பி வைக்கப்படும். அதன் உதவியால் அவர்களால் மேற்கொண்டு முன்னேறிச் செல்ல முடியும் என்றும் கூறினார்கள்.

சில வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி, ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் உதவிக்காக விண்ணப்பிப்பதற்கு மதீனா செல்லவுமில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்திக்கவுமில்லை. மாறாக, அன்னார் தமது படையுடன் டெல்டா பகுதிகளில் முன்னேறிச் சென்றவாறு மிகவும் தொலைவில் சென்றுவிட்டார்கள். முன்னால் சென்று ஈரானிய படைத் தளபதி ஹர்முஸ் உடைய படைகளை எதிர்கொள்ள வேண்டி வந்தது. அப்போது ஹர்முஸ் எல்லைப்புற படைகளின் தலைவனாக இருந்தான். கிஸ்ரா பேரரசனின் பார்வையில் ஒரு நபருக்குக் கிடைக்க முடிந்த மிகப் பெரும் அந்தஸ்தைப் பெற்ற மக்களில் ஒருவனாக ஹர்முஸ் இருந்தான். ஹர்முஸுக்கும், முஸன்னா அவர்களுக்கும் இடையில் போர் நடந்து கொண்டிருக்கையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த சம்பவங்கள் பற்றித் தெரிய வந்தது.

அப்போது அன்னாருக்கு முஸன்னாவுடைய பெயரே தெரியாமல் இருந்தது. அந்த செய்திகள் வந்தடைந்தபோது, அன்னார் ஆய்வு செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிரான போர்களின் போது பஹ்ரைனுக்குள் பல்வேறு சிறப்பு பணிகளை ஆற்றியுள்ளார்கள் என்பது தெரிய வந்தது.

ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு படையுடன் ஈராக் செல்லுங்கள், ஹர்முஸை வெற்றி கண்டு ஹைராவை நோக்கிச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

ஹைராவும், கூஃபாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள ஒரு நகரமாகும். அத்துடன் ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனம் (ரலி) அவர்களுக்கு, தூமத்துல் ஜந்தல் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். தூமத்துல் ஜந்தல் என்பது சிரியாவுக்கும், மதீனாவுக்கும் இடையில் உள்ள ஒரு கோட்டையும், ஊரும் ஆகும். அது, அந்தக் காலத்தில் இருந்த பயண வழிமுறைப்படி மதீனாவிலிருந்து 15, 16 நாட்கள் பயணத் தொலைவில் இருந்தது.

அங்கிருக்கும் மக்களில் கலகம் செய்யும் முர்தத்களைக் கட்டுப்படுபவர்களாக ஆக்கிவிட்டு ஹைரா சென்றடையுங்கள் என்றும் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனம் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபி ஆவார்கள். அன்னார் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அதில் கலந்தும் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் தமது மரணத்தின்போது, அன்னாரை சிரியாவில் தமது பிரதிநிதியாக நியமித்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அன்னாரை அந்தப் பொறுப்பிலேயே நிலைத்திருக்கச் செய்தார்கள். மேலும் கூறினார்கள்: எவரை ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அமீராக நியமித்தார்களோ அந்த அமீரை நான் மாற்ற மாட்டேன்.

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி)

மற்றும் ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனம் (ரலி) ஆகிய இருவரில் எவர் முதலில் ஹைரா சென்றடைகிறார்களோ அவருக்கே அந்தப் பகுதியில் போர் நடவடிக்கை மேற்கொள்ளும் படையின் தலைமை பொறுப்பு கிடைக்கும்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் மொழியாக்க நூல்-ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 261-266) (முஃஜமுல் பல்தான் தொகுதி 2, பக்கம் 376, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமாவில் பணிகளை முடித்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்:

ஃபஜ்ஜுல் ஹிந்த் அதாவது, அபுல்லாஹ்விலிருந்து ஆரம்பம் செய்யுங்கள். ஈராக்கின் மேற்புற பகுதிகளின் வழியாக ஈராக் சென்றடையுங்கள். மக்களைத் தங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் பால் அழைப்பு விடுங்கள். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டால் சரி, இல்லை என்றால் அவர்களிடம் ஜிஸ்யா வரி வசூல் செய்யுங்கள். அவர்கள் ஜிஸ்யா வரி செலுத்த மறுத்தால், அவர்களுடன் போரிடுங்கள். மேலும், இவ்வாறு கட்டளையிட்டார்கள்:

எவரரையும் உங்களுடன் போருக்காகப் புறப்படுமாறு நிர்ப்பந்திக்காதீர்கள். இஸ்லாத்தை விட்டு முர்தத் ஆன எந்த நபரிடமும், அவர் பிறகு இஸ்லாத்திற்குத் திரும்பி வந்திருந்தாலும் சரி உதவி பெறாதீர்கள். எந்த முஸ்லிமைக் கடந்து சென்றாலும் அவரை உங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள்.

பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் உதவிக்காகப் படையை ஆயத்தப்படுத்துவதில் ஈடுபட்டார்கள்.

(அல் பதாயா வன் னஹாயா லி இப்னி அஸீர், தொகுதி 3, பாகம் 6, பக்கம் 338, பஃஸ் காலித் பின் அல் வலீது இலல் ஈராக் தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமாவிலிருந்து ஈராக் செல்லும் போது, தமது படையை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தார்கள்.

எல்லாரையும் ஒரேவழியாக அனுப்பினார்கள். இன்னும் கூறப்போனால், தாம் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்குப் பிறகு, அதீ பின் ஹாத்திம் மற்றும் ஆஸிம் பின் அம்ர் (ரலி) அவர்களை ஒரு நாள் இடைவெளியில் அனுப்பி வைத்தார்கள். எல்லாருக்கும் பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தாம் புறப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஹஃபீர் எனும் இடத்தில் ஒன்று கூடுமாறு உறுதி கூறினார்கள். இவ்வாறு அங்கிருந்து ஒரேயடியாகத் தமது எதிரிகளுடன் மோத முடியும். ஹஃபீர் என்பது பஸாரவிலிருந்து மக்காவை நோக்கிச் செல்லும்போது, வரும் முதல் வழியிடைப்படி ஆகும்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்த எல்லை, பாரசீகத்தின் எல்லா எல்லைகளைக் காட்டிலும் மேன்மை மற்றும் கம்பீரத்தின் அடிப்படையில் எல்லாவற்றை விடவும், பெரிய மற்றும் வலுவான எல்லையாக இருந்தது. ஹர்முஸ் இதன் ஆட்சியாளனாக இருந்தான். இங்கிருந்த படைத் தளபதி ஒருபுறம் நிலத்தில் அரேபியர்களுடன் மோதி வந்தான். மறுபுறம் கடலில் இந்தியர்களுடன் மோதிவந்தான்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 309, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012) (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 309, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் படையின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. ஏனென்றால், ஒன்று அதன் பெரும் பகுதி யமாமா போரில் பயன்பட்டிருந்தது. இரண்டாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், எவராவது ஈராக் செல்ல விரும்பவில்லை என்றால் அவரை வற்புறுத்தக் கூடாது என்று அன்னாருக்கு வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். அத்துடன் மிகவும் முக்கியமான இந்த ஒரு வழிகாட்டலையும் வழங்கி இருந்தார்கள்.

அதுபோக, முந்தைய முர்தத் எவரையும், அவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் சரி, கலீஃபாவிடமிருந்து சிறப்பு அனுமதி பெறாத வரை இஸ்லாமியப் படையில் அவரை இணைத்துக் கொள்ளக் கூடாது.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மேற்கொண்டு உதவிப்படை அனுப்புவதற்காக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். அப்போது, அன்னார் கஃகஃஆ பின் அம்ர் எனும் ஒரு நபரை மட்டும் அன்னாருக்கு உதவி புரிவதற்காக அனுப்பி வைத்தார்கள். மக்களுக்கு வியப்பு ஏற்பட்டது. தாங்கள் காலிதுக்கு உதவுவதற்காக ஒரு நபரை மட்டும் அனுப்புகிறீர்கள். ஆனால், படையின் பெரும் பகுதியோ இப்போது அவர்களை விட்டுப் பிரிந்து விட்டதே? என்று அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதற்கு இவ்வாறு பதில் அளித்தார்கள்:

எந்தப் படையில் கஃகஃஆ போன்ற மனிதர் உள்ளாரோ அது ஒருபோதும் தோல்வி அடையாது. பிறகும் கூட, அன்னார் கஃகஃஆ அவர்களின் கையில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்கள். அதில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்துக்குப் பிறகும் அப்படியே இஸ்லாத்தில் நிலைத்திருந்த மற்றும் முர்தத்களுக்கு எதிராகப் போர்களில் கலந்து கொண்ட மக்களுக்குத் தமது படையில் எழுச்சியூட்டுமாறு கூறினார்கள்.

இந்தக் கடிதம் கிடைத்ததும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது படையை வரிசைப்படுத்த துவங்கிவிட்டார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் மொழியாக்க நூல்-ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 261-266 பதிப்பு 2004)

ஈராக்கில் இருந்த விவசாயிகள் தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வலியுறுத்திக் கூறியது மற்றும் அன்னார் மேற்கொண்ட ஹிக்மத்தான செயல் ஆகியவற்றைப் பற்றி எழுதப்பட்டுள்ளது:

அரேபியர்கள் ஈராக்கின் மண்ணில் விவசாயிகளாகப் பணியாற்றி வந்தார்கள். விளைச்சல் வந்ததும், அவர்களுக்குப் பங்கீட்டில் மிகவும் குறைவான பங்கே கிடைத்தது. பெரும்பாலான பங்கு, அந்த நிலங்களின் சொந்தக்காரர்களாக இருந்த அந்த ஈரானியர்களிடம் சென்றுவிடும். இந்த சில உரிமையாளர்கள் ஏழை அரேபியர்கள் மீது அளவு கடந்த அநீதி இழைத்து வந்தனர். அடிமைகளிடம் நடந்து கொள்வதை விட மோசமாக அவர்களுடன் நடந்து கொண்டனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஈராக்கில் தமது படைத் தளபதிகளுக்கு இவ்வாறு ஆணையிட்டார்கள்:

போரின்போது, அந்த அரேபிய விவசாயிகளுக்கு எந்தத் துன்பமும் கொடுக்கக் கூடாது. அவர்களைக் கொல்லவும் கூடாது. சிறைபிடிக்கவும் கூடாது. சுருக்கமாக, அவர்களுடன் எவ்விதத்திலும் தவறாக நடந்து கொள்ளக் கூடாது. ஏனெனில், அவர்களும் அவர்களைப் போன்ற அரேபியர்கள் ஆவர். மேலும், ஈரானியர்களின் அநீதி அக்கிரமங்களில் அரைபட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கு அரேபியர்களின் ஆட்சி நிலைபெற்றால், அவர்களின் அநீதிக்குள்ளான வாழ்நாள்கள் முடிவுக்கு வந்துவிடும் என்பதையும், அவர்கள் தமது சமுதாயத்து மக்களால் உண்மையான நீதி நியாயம், ஆகுமான சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றைப் பெற முடியும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த ஹிக்மத்தான செயல் முஸ்லிம்களுக்கு அளவற்ற பயனைத் தந்தது. அவர்களின் வெற்றிக்கான

வழிகளில் எளிமைகள் ஏற்பட்டு விட்டன. அவர்கள் முன்னேறிச் செல்லும்போது,

பின்னாலிருந்து தாக்கப்பட்டு அவர்களின் வழி அடைபட்டு விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கவில்லை.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் மொழியாக்க நூல்-ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்கள், பக்கம் 267-268, பதிப்பு 2004)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் லபாஜ் எனும் இடத்தில் முகாமிட்டபோது, ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் தமது படையுடன் கஃபான் எனும் இடத்தில் இருந்தார்கள். லபாஜ் என்பது பஸராவுக்கும் யமாமாவுக்கும் இடைப்பட்ட ஓர் இடமாகும். கஃபான் என்பது கூஃபாவுக்கு அருகில் உள்ள ஓர் இடமாகும்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களுக்கு அவர்கள் தம்மிடம் வருமாறு ஒரு கடிதம் எழுதினார்கள். அத்துடன் சேர்த்து ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கட்டுப்படுமாறு கட்டளையிட்டிருந்த அந்தக் கடிதத்தையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பினார்கள்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 308, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012) (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 434 (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 309, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

இவை அனைத்தும் தபரீ வரலாற்று நூலின் அறிவிப்புகள் ஆகும். எவ்வாறு இருப்பினும், பிறகு போர்கள் நடந்தன.

எந்தெந்தப் போர்கள் நடந்தன? அவற்றின் பெயர்கள் என்ன? அவற்றின் வெற்றிகளைப் பற்றிய குறிப்பு ஆகியவை இனி எடுத்துரைக்கப்படும்.

இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில், ஈரானியர்களுக்கு எதிராக ஈராக்கின் பகுதிகளில் முஸ்லிம்கள் இந்தப் போர்களைப் புரிந்தார்கள். அதில் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் காலத்தில் முஸ்லிம்களுக்கு வழங்கிய வெற்றிகளைப் பற்றி எடுத்துரைக்கப்படும்.

இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

## (மல்ஃபூஸாத்) முதல் பக்கத் தொடர்ச்சி

பூங்காக்கள் மற்றும் பாரிஸின் ஹோட்டல்களின் நிலைமைகளைக் குறித்து வெளியாகியுள்ள விஷயங்களை நம்மால் குறிப்பிட கூட முடியாது. ஆனால், விண்ணின் ஞானங்களையும், திருக்குர்ஆன் ரகசியங்களையும் அறிந்து கொள்வதற்கு தக்வா (இறையச்சம்) முதல் நிபந்தனையாகும். அதில், தவ்பத்துன் நஸுஹ் (உண்மையான தவ்பா) அவசியமாகும். மனிதன் முழுமையான பணிவுடன் அல்லாஹ்வின் கட்டளைகளை செயல்படுத்தாத வரை, இறைவனின் கம்பீரம் மற்றும் வல்லமைக்கு அஞ்சி, நடுங்கி அவன் பக்கம் குனியாத வரை, திருக்குர்ஆன் ஞானங்களின் கதவு மனிதனுக்கு திறந்து கொடுக்கப்பட மாட்டாது. மேலும், ஆன்மாவிற்கான சிறப்புத் தன்மைகளும், ஆற்றலை வளர்க்கும் வழிவகைகளும் அவனுக்கு திருக்குர்ஆனிலிருந்து கிடைக்க முடியாது. அதாவது எதன் மூலம் ஆன்மாவிற்கு ஓர் இன்பமும், நிம்மதியும் கிடைக்க முடியுமோ அதனை மனிதன் பெற முடியாது.

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். மேலும், அதன் ஞானங்கள் இறைவனின் கரங்களில் உள்ளது. எனவே அதற்கான ஏணியாக தக்வா (இறையச்சம்) உள்ளது. அவ்வாறிருக்க, ஈமான் அற்றவரும், தீயவரும், தீய இயல்பு கொண்டவரும், உலக ஆசைகளின் கைதிகளும் அந்த ஞானங்களைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு சாத்தியமாக இருக்க முடியும்? ஆதலால், ஒரு முஸ்லிம் அவர் தம்மை முஸ்லிம் என்று கூறிக் கொண்டு, அவர் இலக்கண, இலக்கிய அறிவுகளில் எவ்வளவு தான் பெரும் அறிஞராக இருந்தாலும் சரியே, அவர் உலகத்தின் பார்வையில் அனைவரையும் விட மாபெரும் அறிஞராக திகழ்ந்தாலும் சரியே, அவர் தமது உள்ளத்தை பரிசுத்தப்படுத்திக் கொள்ளவில்லையென்றால் திருக்குர்ஆன் ஞானங்களிலிருந்து அவருக்கு பங்கு வழங்கப்பட மாட்டாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 384, காதியான் பதிப்பு 2008)

## (தஃப்ஸீரே கபீர்) முதல்பக்கத் தொடர்ச்சி

அவருடன் நல்ல முறையில் நடந்துள்ளானோ அதே போன்று அவரும் அவனுக்குரிய உரிமையை வழங்கவேண்டும். மேலும், தமது இருப்பால் அல்லாஹ்விற்கு ஆட்சேபனைகளை உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. அதே போன்று, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை அல்லாஹ் அல்லாதவற்றிற்கு வழங்கக் கூடாது. மேலும், இணை வைத்தலில் ஈடுபடக் கூடாது. ஏனென்றால், இணை வைத்தல் என்பது அல்லாஹ்விற்குரிய உரிமைகளை பறித்து பிறருக்கு வழங்குவதாகும். இது அநீதியாகும். இதன் காரணமாகவே திருக்குர்ஆனில், இணை வைத்தலுக்கு அநீதி என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது. எனவே இறைவனுக்கு மகனையோ அல்லது மனைவியையோ அல்லது அவனுக்கு எதையாவது, இணையாக்கிக் கொள்வது அத்ல் எனும் நீதி அல்ல மாறாக, அது அநீதி ஆகும். ஏனென்றால், ஒருவரின் உரிமையை வேறொருவருக்கு கொடுத்துவிடுவதையே அநீதி என்பர். அதேபோன்று, இறைவனின் பண்புகளுக்குரியராக தம்மை கூறிக் கொள்வதும் நீதிக்கு எதிரானதாகும். உதாரணமாக, ஷரீஅத்தை உருவாக்குவது, இறை இல்ஹாம்களை அனுப்புவது இறைவனின் பணியாகும்.

தற்போது, ஒருவர் சுயமே ஷரீஅத்தை உருவாக்கிக்கொண்டதாக வாதிட்டால் அல்லது உதாரணமாக, பஹாவுல்லாஹ் போன்றோர் செய்ததைப் போன்று இல்ஹாம் இறக்குவதாக கூறினால், அவர் நீதியை முறிக்கின்றார்.

மனிதன் இறைவனுடன் நீதமாக நடந்து கொண்டால், பின்னர் இணை வைத்தல், நிராகரிப்பு மற்றும் கட்டுப்படாமை போன்ற விஷயங்கள் அழிந்துவிடும்.

அத்ல் என்பதை கடந்த அடுத்த படித்தரம் என்பது இஹ்ஸான் ஆகும். இஹ்ஸான் என்பதன் பொருள் பிறர் தம்முடன் எப்படி நடந்து கொள்கிறார் என்று பார்க்கக் கூடாது. மாறாக ஒருவர் தவறாக நடந்து கொண்டாலும், நாம் அவருடன் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதாகும். இந்த படித்தரம் முந்தைய படித்தரத்தை விட உயர்ந்ததாகும். மன்னித்தல், ஏழைகளுக்கு உதவுதல், தான, தருமங்கள் மற்றும் சமுதாயத் தொண்டுகள் போன்ற இந்த நன்மைகள் அனைத்தும் இதற்குள் அடங்கும்.

கல்வியின் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்வதும் அவற்றுள் வந்து விடும். ஏனென்றால், அதன் விளைவாக நம்மவர் மற்றும் அந்நியர்களுக்கு பௌதீக மற்றும் ஆன்மீக நன்மைகளும், பயன்களும் கிடைக்கின்றன.

மூன்றாவது படித்தரம் என்பது ஈதாயிதில் குர்பா என்று இறைவன் கூறுகிறான். அதன் பொருள் உறவினர்களுக்கு கொடுப்பதாகும். அதன் விளக்கம் இவ்வாறாகும். அதாவது, ஓர் உறவினர் மற்ற உறவினரிடம் நடந்து கொள்வதைப் போன்று மனித இனத்துடன் நடந்து கொள்வதாகும்.

இவ்வாறு நடந்து கொள்வதற்கு இஹ்ஸான் என்ற படித்தரத்தின் பொருள் அல்ல. ஏனென்றால், இஹ்ஸானைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது.

இயற்கையான அன்பினால் எவ்வித பிரதிபலனுக்கான எண்ணமுமின்றி நடந்து கொள்ளக் கூடிய நடைமுறைக்கு ஈதாயிதில் குர்பா என்று பொருள். இன்ன நபர் என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டுள்ளார். எனவே நான் அதைவிட சிறந்த பிரதிபலனை வழங்கவேண்டும். அதனால் எனக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்ற எண்ணம் இஹ்ஸான் செய்யும்போது ஏற்படும். அல்லது தவறிழைத்தவர்களின் குற்றத்தை மன்னிக்கும்போது, நான் அவருடன் அழகிய முறையில் நடந்தால் அவரது உள்ளத்தில் உள்ள பகைமை நீங்கிவிடும் மேலும் அவர் எனது நண்பராகிவிடுவார். மேலும் எனக்கு அவர் வலிமை சேர்ப்பார் என்ற எண்ணம் இஹ்ஸான் செய்யும்போது தோன்றும். ஆனால், தாய் தனது குழந்தையை நேசிக்கின்றாள். மேலும், அக்குழந்தைக்காக தியாகம் செய்கின்றாள். அதற்கு பகரமாக எந்த பிரதிபலனுக்கும் அந்தத் தாய் ஆசை கொள்வதில்லை. மாறாக, அவளது நேசத்தின் அடித்தளம் என்பது அவளது சொந்த தியாகத்தின் மீது அமைந்துள்ளது. ஒரு பெண்ணிற்கு பிள்ளைகள் இல்லாதபோது, எனக்கு மகன் இருந்தால் அவன் எனக்கு தொண்டு செய்திருப்பான் என்ற எண்ணம் அவளது உள்ளத்தில் தோன்றுவதில்லை.

இஹ்ஸான் என்ற படித்தரத்தை அடைந்த பிறகு, உங்களுக்கு பெறுவதை விட கொடுப்பதற்கு அதிக ஆசை இருக்கின்றது. எனவே, அனைத்து மனிதர்களும் உங்களது பிள்ளைகள் போன்று தென்படுகின்ற அந்த நன்மையின் படித்தரத்தை நீங்கள் அடையுங்கள். ஒரு தாயின் உள்ளத்தில் குழந்தையின் மீதான அன்பின் உணர்வு பொங்கி எழுவதைப் போன்று மனித இனத்தின் தொண்டிற்கான உணர்வு உங்கள் உள்ளத்தில் உருவாகிவிட வேண்டும்.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 4, பக்கம் 220, காதியான் பதிப்பு-2010)

* * * * *

★ அன்சார் சகோதரர்கள் மிதிவண்டி ஓட்டுங்கள். இதர விளையாட்டுகளிலும் பங்கு பெற்று வாருங்கள். அப்போதுதான் வயது அதிகரித்தாலும் அவர்களின் ஆரோக்கியமும், fitness-ம் நிலைபெற்றிருக்கும்.

★ எல்லா பணிகளையும் முதலில் உங்களது வீட்டில் இருந்து ஆரம்பம் செய்யுங்கள். உங்களது செயற்குழு வீடு ஆகும். முதலில் செயற்குழுவிடம் அறிந்து அறிக்கை வாங்குங்கள். பின்னர் மற்றவர்களிடம் கேளுங்கள்.

★ அன்சார் சகோதரர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முழுமையான முயற்சி செய்ய வேண்டும்.

★ சிறந்த முடிவுகள் வெளிப்படுவதற்கு மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் ஏனைய கிளைஅமைப்புகளுடன் இணைந்து கூட்டு முயற்சி செய்ய வேண்டும்.

★ ஆஃப்ரிக்காவின் முன்னேற்றம் அடையாத பகுதிகளில் தண்ணீர் குழாய் மற்றும் மாதிரி கிராமம் கட்டுமானம் போன்றவற்றில் ஹாலந்து மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் உதவி செய்ய வேண்டும். ஒரு திட்டத்தை துவங்க வேண்டும்.

★ நாம் மிகவும் திட உறுதிகொண்டவர்களாக இருக்கவேண்டும். ஊக்கமின்மை நம்மவர்கள் சார்பாக ஏற்படுத்தப்பட்டாலும், அந்நியர்கள் சார்பாக ஏற்படுத்தப்பட்டாலும் சரி, நாம் அதனை பொருட்படுத்தக் கூடாது. நாம் இறைவனுக்காக பணி செய்கின்றோம் என்ற சிந்தனை கொள்ள வேண்டும்.

## அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் ஹாலந்தின் ஆன் லைன் சந்திப்பு

ஆகஸ்ட் 15,2021 அன்று ஹாலந்தின் தேசிய மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் செயற்குழுவின் உறுப்பினர்களுக்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை ஆன்லைன் மூலம் சந்திக்கும் நற்பேறு கிடைத்தது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சந்திப்பிற்காக தமது இஸ்லாமாபாத் (டில்ஃபோர்ட்) அலுவலகத்திற்கு வருகை தந்து அமர்ந்திருந்தார்கள். அதேநேரம் தேசிய அன்சாருல்லாஹ் செயற்குழு உறுப்பினர்கள் அந்த ஆன்லைன் சந்திப்பில் மஸ்ஜித் பைத்துன் நூர் (nuspeet) ஹாலந்திலிருந்து கலந்து கொண்டார்கள். ஒரு மணிநேரம் வரை நடைபெற்ற அந்த சந்திப்பில், மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு முன்னால் தத்தமது துறைகளின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும், வழிகாட்டல் பெற்றுக் கொள்வதற்கும் நற்பேறு கிடைத்தது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் உறுப்பினர்களுக்கு சைக்கிளிங் தொடர்பாக கவனமூட்டியவாறு கூறினார்கள்: அதாவது தொடர்ந்து மிதிவண்டி ஓட்டுங்கள். இதர விளையாட்டுகளிலும் பங்கு பெற்று வாருங்கள். அப்போதுதான் வயது அதிகரித்தாலும் உங்களின் ஆரோக்கியமும், fitness-ம் நிலைபெற்றிருக்கும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: வயது அதிகரிப்பதன் தாக்கம் மூளையின் செயல்பாட்டிலிருந்து தெரிய வருகின்றது. ஒருவர் நேர்மறை எண்ணம் கொண்டவராக இருக்கின்றார் மேலும் இளமையான இதயம் படைத்தவராக இருக்கின்றார் என்றால், பொதுவாக அவரது உடல்நலத்திலும், நிலைமைகளிலும் நேர்மறையான தாக்கம் ஏற்படும்.

காயித் சாஹிப் தஃலீம் அவர்களிடம், நீங்கள் வருடத்தில் அன்சார் சகோதரர்களுக்கு எத்தனை புத்தகங்கள் படிக்கக் கொடுக்கின்றீர்கள்? என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, முதலில் அதிகமாக கொடுத்து வந்தோம். ஆனால், இந்த முறை ஒரு புத்தகமே அதாவது ஹகீகத்துல் வஹீ மட்டுமே கொடுத்துள்ளோம் என்று அவர் கூறினார். ஆமிலாவின் (செயற்குழுவின்) உறுப்பினர்களில் எத்தனை நபர்கள் அதனை படித்துள்ளனர்? என்று கூறுங்கள். முதலில் வீட்டிலிருந்து ஆரம்பியுங்கள். உங்களது செயற்குழு வீடு ஆகும். ஆமிலாவின் உறுப்பினர்கள் எத்தனை நபர்கள் படித்துவிட்டனர்? என்று கூறுங்கள். முதலில் ஆமிலாவிடம் அறிக்கை பெறுங்கள். சதர் சாஹிபிடமிருந்து துவங்குங்கள். பின்னர் மற்றவர்களிடம் கேளுங்கள் என ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: செயற்குழு உறுப்பினர்கள் புத்தகத்தைப் படித்துவிட்ட பிறகு பின்னர் நீங்கள் உங்கள் ஸயீம் மார்களிடம் செல்லுங்கள். அந்த ஸயீம் மார்கள் படித்துவிட்டனரா? எனப் பாருங்கள். பின்னர் நீங்கள் உங்களது நாஸிம் மார்களிடம் செல்லுங்கள். அவர்கள் படித்துவிட்டனரா? என்று பாருங்கள். பின்னர் பொறுப்பாளர்கள் அல்லாத ஏனைய அன்சார் சகோதரர்களிடம் கேளுங்கள். எனவே நீங்கள், எல்லா மட்டத்திலும் உள்ள செயற்குழு உறுப்பினர்களை புத்தகத்தை படிக்க வையுங்கள் அல்லது எந்த ஒரு நிகழ்ச்சியிலும் அவர்களை இணைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் உங்களது தஜ்னீதின் 60 விழுக்காடு பணிகள் இவ்வாறு முடிந்துவிடும்.

எனவே எல்லா மட்டத்திலும் உள்ள உங்களது பல்வேறு செயற்குழுக்கள் Active-ஆகிவிட்டால் பின்னர் உங்களது 60 விழுக்காடு பணிகள் முடிந்துவிடும். எந்த சிக்கலும் இருக்காது. சிக்கல் என்னவென்றால், நாம் வீட்டில் அமர்ந்து கொண்டு கட்டளைகளை மட்டுமே பிறப்பிக்கின்றோம். சுயம் படிப்பதில்லை.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காயித் சாஹிப் தஃலீமிடம், நீங்கள் இந்த புத்தகத்தை எவ்வளவு படித்துள்ளீர்கள்? இந்த புத்தகத்தின் முதல் பகுதியின் கட்டுரை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு, நான் 70 விழுக்காடு படித்துவிட்டேன். முதல் பகுதியில் வஹீயின் வகைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அதன் சுருக்கம் இதுவாகும். அதாவது கனவுகள் பார்த்துவிட்டு மகிழ்ச்சியடைந்துவிடாதீர்கள். அசல் விஷயம் நன்மை மற்றும் தக்வா ஆகும்.

எவ்வாறு இருப்பினும், உங்களது காயித் மார்களிடமிருந்து எத்தனை நபர்கள் படித்துவிட்டனர் என்ற அறிக்கையை நீங்கள் பெறுங்கள்.

பின்னர், ஸயீம் மார்களிடமும், நாஸிம் மார்களிடமும் அறிக்கை வாங்குங்கள். பின்னர் ஏனைய அன்சார் உறுப்பினர்களிடமும், மஜ்லிஸ்களின் உறுப்பினர்களிடமும் கேளுங்கள். மேலும், தமது அனைத்து மட்டங்களிலும் இருக்கும் உங்கள் நாஸிம் தஃலீம்களையும் Active -ஆக்குங்கள். அறிக்கை பெறும்படியும், ஆய்வு செய்யும்படியும் அவர்களிடம் கூறுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: ஹாலந்தில் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பரப்புவதற்காக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முயற்சி செய்யுங்கள். மேலும், கூறினார்கள்: மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் ஏனைய கிளை அமைப்புகளுடனும், ஜமாஅத் மட்டத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடனும் இணைந்து கூட்டாக முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான், சிறந்த விளைவுகள் வெளிப்பட முடியும்.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 18 August 2022 Issue No. 33

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஈஸார் (சேவைத்) துறையின் அடிப்படையில் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்விற்கு அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்: நீங்கள் ஆஃப்ரிக்காவின் முன்னேற்றம் அடையாத பகுதிகளில் தண்ணீர் பம்புகள் மற்றும் மாதிரி கிராமங்களின் கட்டுமானங்களில் உதவி செய்யுங்கள். (மாதிரி கிராமங்களில் உள்ளூர் மற்றும் கிராம வாசிகளுக்கு வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.)

சந்திப்பின் இறுதியில், ஒரு அன்சார் சகோதரர் இவ்வாறு கேள்வி கேட்டார்: அதாவது, எங்களது தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கும் அதேபோன்று உள்ளூர் அளவில் இருக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சில அன்சார் சகோதரர்களின் நடவடிக்கையால் சில முறை மனசோர்வு ஏற்பட்டுவிடுகின்றது. அவர்களை ஊக்குவிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: அவர்கள் அந்த உறுப்பினர்களுக்காக பணி செய்கின்றனர் என்றால், பின்னர் அவர்கள் சோர்வடைவது ஆகுமானதாகும். அவர்கள் இறைவனுக்காக பணி செய்கின்றனர் என்றால், பின்னர் சோர்வடைவது ஆகுமானதல்ல. முதல் விஷயம், அவர்கள் ஒன்றும் குழந்தைகள் அல்ல! அவர்கள் அன்சார் சகோதரர்கள். நாற்பது வயதில் பக்குவமடைந்த பிறகு, அன்சார் அமைப்பில் நுழைகின்றனர். ஏதாவது ஒரு நாஸிர் சார்பாக, மன வேதனை கொடுக்கப்படுகின்றது. மன வேதனை கொடுக்கப்படும். 70 வயதைக் கடந்த சில முதியவர்கள் இருக்கின்றனர். அவர்கள் சில முறை ஏசிவிடுகின்றனர். அல்லது சில இளம் அன்சார் சகோதரர்கள் புறமிருந்தும் மனவேதனை தரப்படலாம். ஆனால், பொதுவாக பெரியவர்கள் புறமிருந்தே துன்பம் கொடுக்கப்படுகிறது. அந்நிலையில், நாம் இறைவனுக்காக பணி செய்ய வேண்டும் என்று நீங்கள் எண்ணம் கொள்ள வேண்டும். மேலும், அனைவருக்கும் நீங்கள் இதனைக் கூறவேண்டும்.

நீங்கள் இறைவனுக்காக பணி செய்யவேண்டும் என்றால், பின்னர் எந்த ஓர் உலகவாதியின் தொல்லை அல்லது பழிச் சொற்களையும் பொருட்படுத்தக் கூடாது. நீங்கள் ஒன்றும் குழந்தைகள் அல்ல. மாஷா அல்லாஹ். நாற்பது வயதை கடந்து முழுமையாக பக்குவமடைந்துவிட்டீர்கள். இதில் உங்களுக்கு மனசோர்வை ஏற்படுத்தினாலும் கூட என்னவாகிடப் போகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபித்துவ அந்தஸ்து கிடைத்த பிறகு தமது உறவினர்களை அழைத்தபோது என்ன நிகழ்ந்தது? அனைவரும் ரொட்டி சாப்பிட்டுவிட்டு ஓடிவிட்டனர். மன சோர்வை ஏற்படுத்தினர். அதனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டார்களா? அன்னார் (ஸல்) அவர்கள், சிறிது காலம் கழித்து அடுத்த முறை மீண்டும் விருந்திற்கு அழைத்தார்கள். இந்த முறை முதலில் தமது தூதுச் செய்தியை எட்டவைத்தார்கள். பின்னர் உணவு வழங்கினார்கள். அதன் பிறகு, அவர்கள் உணவு அருந்திவிட்டு சென்றுவிட்டனர். பிடிவாதம் பிடித்த மக்களாக இருந்தனர். அதனால் அன்னார் (ஸல்) மனசோர்வு அடைந்துவிட்டார்களா என்ன? எனவே நாம் திடமிக்கவர்களாக இருக்க வேண்டும். நம்மவர்கள் புறமிருந்தோ அல்லது அந்நியர்கள் புறமிருந்தோ மனசோர்வு ஏற்படச் செய்தால் நாம் அதனை பொருட்படுத்தக் கூடாது. நாம் இறைவனுக்காக பணி செய்கின்றோம் என்று எண்ணம் கொள்ள வேண்டும். இறைவனுக்காக பணி செய்கின்றோம் என்றால், பின்னர் எந்த ஒரு மனிதனின் புகழ்ச்சி அல்லது இகழ்ச்சியை பொருட்படுத்தக் கூடாது. நமது பணிகளுக்கு அல்லாஹ்தான் நற்கூலி வழங்கவேண்டும். அவ்வாறிருக்க அவனிடம் அதற்கான நற்கூலியை வேண்டுங்கள்.

எனவே மனிதர்களிடம் ஏதாவது ஒரு வகையில் reward கேட்க ஏன் விரும்புகிறீர்கள்?

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, ஆகஸ்ட் 31, 2021)

* * * * *

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியா, காதியான்)

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad